FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உ/த)தவணைப் பரீட்சை

## Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை- 2017
## Term Examination, July - 2017

| தரம் :- 12 (2018) | வணிகக்கல்வி | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :....................................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

The National e-Learning Portal for The General Education

01) தேவைகளும் விருப்பங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

A - உணவு　　B - பால்　　C - உடை

D - பத்திரிகை　　E - கல்வி　　F - பாதணி

G - பாதுகாப்பு　　H - மருத்துமருத்துவர்

மேலே தரப்பட்டவற்றுள் விருப்பங்களை மட்டும் உள்ளடங்கியுள்ள தொகுதி எது?

1) B,E,G,H　　2) B,C,D,E　　3) A,C,E,G

4) B,D,F,H　　5) A,C,F,G　　(……)

02) A - போட்டித்தன்மை குறைதல்

B - புதிய உற்பத்தி முறைகள்

C - அதிவேகப் பாதைகளை நிர்மாணித்தல்

D - அரசுமூலம் குறைவான வட்டிவீதத்தில் கடன்முறைகளை அறிமுகப்படுத்தல்

E - நுகர்வோரின் வாழ்க்கைப் பாங்கு (Life style) மாற்றமடைதல்

F - பொருளாதார மந்தம்

G - பொருத்தமான அமைவிடம்

மேலுள்ளவற்றுலிருந்து வணிக வாய்ப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

1) A,B,C,G　　2) A,C,D,E　　3) B,D,E,G

4) C,D,E,G　　5) A,B,D,E　　(……)

03) பின்வரும் அட்டவணையானது தனியுடைமை வியாபார நடவடிக்கைகள் மீது தாக்கம் செலுத்தும் சில உள்ளக விசைகளையும் பலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

| உள்ளக விசைகள் | பலங்கள் |
|---|---|
| A. - நிறுவன கலாச்சாரம் | 1. தூரநோக்கு. |
| B. - முகாமையாளர் | 2. இலக்கினை அடைவதற்கு உதவுதல். |
| C. - உடைமையாளர் | 3. உயர்தரத்துடன் இருத்தல். |
| D. - வளங்கள் | 4. அர்ப்பணிப்புடன் செயற்படல். |

மேலே தரப்பட்ட அட்டவணையை கருத்திற் கொண்டு உள்ளக விசைகளுக்கும் பலங்களுக்கும் மிகவும் பொருத்தக் கூடிய சரியான தொகுதியைத் தெரிவு செய்க.

1) A-3, B-1, C-4, D-2 2) A-2, B-1, C-4, D-3 3) A-2, B-4, C-1, D-3
4) A-3, B-4, C-1, D-2 5) A-1, B-2, C-4, D-3 (……)

04) பல்வேறு தரப்பினரும் வணிகத்தின் மீது அக்கறை கொள்வதற்கு ஏதுவான காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - இலாபம் B - வேலையில் திருப்தி C - சந்தைப்பங்கு
D - சமூகநலன் E - சம்பளம் F - தொழிலின் நிலையான தன்மை
G - பதவிஉயர்வு H - தொழில்அபிவிருத்தி

மேலுள்ளவற்றுள் வணிகத்தின் மீது ஊழியர்கள் மட்டும் அக்கறை கொள்வதற்கான காரணங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) B,D,E,G 2) B,E,F,G 3) B,E,G,H
4) D,E,F,H 5) A,B,E,G (……)

05) நுகர்வோர் பாதுகாப்பினால் கிடைக்கப் பெறுகின்ற நன்மைகள்

A - சட்டப்பாதுகாப்பினை பெறமுடிதல்.
B - பொருளின் உற்பத்திக் கிரயம் குறைவடைதல்
C - உடல் நலனும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படல்.
D - விற்பனை அதிகரித்து இலாபம் அதிகரித்தல்
E - நுகர்வோரின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ள முடிதல்
F - செலுத்துகின்ற பணத்திற்கு போதுமானளவு திருப்தியினை பெறமுடிதல்

மேலே தரப்பட்டவற்றுள் நுகர்வோருக்கு மட்டும் பொருத்தக் கூடிய சரியான இணைப்பைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

1) B,C,D 2) A,B,C 3) A,D,F
4) A,C,F 5) C,D,F (……)

06) வணிக நிறுவனத்தின் அங்கத்தவர்களது குறைந்த எண்ணிக்கையைக் காட்டும் சரியான நிரையைப் பின்வரும் அட்டவணையிலிருந்து தெரிவு செய்க.

| பங்குடமை | தனியார் கம்பனி | பொதுக் கம்பனி | உத்தரவாதக்கம்பனி | கூட்டுறவு |
|---|---|---|---|---|
| 1) 2 | 2 | 7 | 7 | 10 |
| 2) 2 | 1 | 1 | 2 | 10 |
| 3) 2 | 7 | 7 | 50 | 7 |
| 4) 2 | 1 | 1 | 7 | 10 |
| 5) 2 | 2 | 7 | 2 | 10 |

(…....)

07) ஒவ்வொரு கம்பனிகளின் வகைகளினையும் ஒன்றோடொன்று ஒப்பிடும் போது பயன்படுத்த முடியாத ஒரு நியதி.

1) மொத்த சொத்துக்களின் பெறுமதி
2) பங்குதாரர்களின் எண்ணிக்கை
3) பங்குதாரர்களின் பொறுப்புக்கள்
4) மூலதன அமைப்பு முறை
5) முகாமைத்துவம் (……)

08) கூட்டுறவு அமைப்புடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பல்வேறுபட்ட துறைகளில் வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்
B - சுயமாக இணைந்த தனிநபர் அமைப்பு
C - தேவைகளும் மற்றும் எதிர்பார்ப்புக்களும் பொதுவானதாகக் காணப்படல்.
D - ஜனநாயக ரீதியான நிர்வாகத்துடன் கூடிய வணிகம்
E - சமூகம் தொடர்பான அக்கறை.

மேலே தரப்பட்டவற்றுள் கூட்டுறவு வணிகத்தின் விசேட பண்புகளை மட்டும் உள்ளடங்கியுள்ள தொகுதி எது?

1) A,B,F 2) A,C,D 3) B,D,E
4) B,C,F 5) A,D,E (……)

09) தனியுடமை வணிகத்தை ஆரம்பிப்பதால் பெறக்கூடிய பிரதான நன்மையாவது

1) தீர்மானங்களை விரைவாக எடுப்பதன் மூலம் வியாபாரத்தை இலாபமடையச் செய்யலாம்.
2) குறைந்த மூலதனத்தோடு ஆரம்பித்து விருத்தி செய்யமுடியும்.
3) வியாபார இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.
4) வாடிக்கையாளரின் நேரடித் தொடர்புகளினால் சந்தையை விரிவு படுத்த முடியும்.
5) அர்ப்பணிப்புடன் வியாபாரத்தை நடாத்துவதனால் வியாபாரம் விரிவடையும் (……)

10) முயற்சியாண்மை எனப்படுவது.

A - தொழிலாளருக்கும் முகாமைக்குமிடையில் மத்தியஸ்தம் வகித்தல்.

B - இடர் நேர்வுள்ள வணிகத்தில் ஈடுபடுவதற்கான வல்லமை.

C - புதியதொரு வணிகத்தை வெற்றிகரமாகத் தாபித்து நடத்தும் வல்லமை.

D - வணிகத்தில் முதலீடு செய்து இலாபங்களைச் சம்பாதிக்கும் வல்லமை.

E - பொருளாதாரத்தில் வாய்ப்புக்களை பற்றிக் கொள்ளும் வல்லமை.

மேலே தரப்பட்டவற்றுள் முயற்சியாண்மை என்பதைச் சரியாக வரையறுக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.

1) A,B,C 2) B,C,D 3) C,D,E

4) B,C,E 5) B,D,E (……)

11) இலங்கை மத்திய வங்கியின் சில தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுகின்றன.

A - நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

B - அந்நிய செலவாணிக் கட்டுப்பாடு.

C - அரச கடன் முகாமைத்துவம்

D - அரசாங்கத்தின் பொருளாதார அறிவுரைஞராகத் தொழிற்படல்.

E - நாணயமாற்று வீதங்களை அமுலாக்கல்.

F - ஊழியர் சேமலாப நிதியை முகாமைத்துவம் செய்தல்.

மேலே தரப்பட்டுள்ள தொழிற்பாடுகளுள் இலங்கை மத்திய வங்கி தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் தொழிற்பாடுகளை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A,B,C 2) A,D,E 3) A,E,F

4) B,D,E 5) D,E,F (…….)

12) A – கூட்டுறவு கிராமிய வங்கிகள்

B – குத்தகைக் கம்பனிகள்

C – காப்புறுதிக் கம்பனிகள்

D – முதன் நிலை வணிகர்கள்

E - நிதிக் கம்பனிகள்

F – கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்

மேலே குறிப்பிட்டவற்றுள் உள்ள ஏனைய விசேட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A,B,C 2) B,C,D 3) D,E,F 4) C,D,F 5) B,D,F (……)

13) ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணத்தை நிர்ணயிப்பதில் பின்வருனவற்றில் எத்தொகுதி கருத்திற் கொள்ளப்படுகிறது.

1) ஆபத்தின் தன்மை, வயது, உடல்நலம், பால்

2) காப்புறுதியின் பெறுமதி, வயது, காலம், வதிவிடச்சூழல்

3) காப்புறுதியின் பெறுமதி, உடல் நலம், பால், ஆபத்தின் தன்மை.

4) வயது, ஆபத்தின் தன்மை, காப்புறுதியின் பெறுமதி, காலம்

5) காப்புறுதியின் பெறுமதி, உடல் நலம், வதிவிடச்சூழல், வயது. (……)

14) வணிகத் தொடர்பாடலின் "பின்னூட்டலின்" முக்கியத்துவம்.

1) பெறுநருக்கு செய்தியை பிழையில்லாமல் கொடுத்தல்.
2) பெறுநரின் கவனத்தை ஈர்த்தல்.
3) பெறுநர் செய்தியை சரியாகப் பெற்றாரா என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.
4) பெறுநருக்கு மீண்டும் செய்தியை அனுப்புதல்.
5) பெறுநரின் துலங்கலை அறிந்து கொள்ளல். (…….)

15) வெளிநாட்டு வியாபாரத்தில் பொருட்களுக்கான கட்டளையை பிறப்பிக்கும் போது இறக்குமதியாளன் ஏற்றுமதியாளனுக்கு அனுப்பி வைக்கும் ஆவணம்.

1) வார்நாமம் / சுமைச்சீட்டு
2) கட்டளையட்டவணை (Indend)
3) நாணயக் கடிதம்
4) பட்டியல் (Inovice)
5) தேற்று வாய்ச்சான்றிதழ் (…….)

- **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்க.**

16) அ) சந்தைகளை ………………………………….... மற்றும் ……………………………..................... முறைகளில் வகைப்படுத்த முடியும்.

ஆ) ………………………………… மற்றும் …………………………………… என்பவற்றின் சேர்க்கை வர்த்தகம் எனப்படும்.

17) அ) உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களின் வகைகள் …………………………………….. உம் …………………………………….. உம் ஆகும்.

ஆ) அனைத்து பங்குத் தாரர்களின் விருப்பப்படி இலாபத்தினைப் பகிர்ந்துளிக்கக்கூடிய கம்பனி ……………………….................................................................. என அழைக்கப்படுவதுடன், அமைப்பு அகவிதிப்பத்திரத்தில் ஒவ்வொரு பங்குதாரரினாலும் கம்பனியினைப் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய தொகையினைக் குறித்துக் காட்டும் கம்பனி வகை ……………………………………………………………… என அழைக்கப்படும்.

18) அ) வரையறுத்த பொதுக்கம்பனிகளின் பங்கு ஒப்புறுதிச் சேவையை வழங்கும் நிறுவனங்கள் இரண்டாக ………………………………. , ……………………………………. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) ஓர் முனைப்படுத்திய கொள்வனவும் பன்முகப்படுத்திய விற்பனையும் மேற்கொள்ளும் வியாபார நிலையம் ……………………………………………. ஆகும்.

19) தற்காலத்தில் பணத்திற்கு பதிலாக பெருமளவில் பயன்படுத்தப்படும் கடன் அட்டை, வரவட்டை ஆகியன ………………………………………….. என அழைக்கப்படுவதுடன் இவற்றின் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதற்கு …………………………………………… மற்றும் ……………………………………………… ஆகியன வசதியளிக்கின்றன.

20) பின்வரும் கூற்றுக்கள் தொடர்பில் சரி, பிழையைக் குறிப்பிடுக.

| கூற்று | சரி / பிழை |
|---|---|
| 1) காசோலை ஒன்றின் சட்டரீதியான உரிமையானது மாற்றம் பெற்றவருக்கு புறக்குறிப்பிட்டு உறுதிப்படுத்த பின்னர் மட்டுமே உரிமையாகும். | (……....) |
| 2) ஆயுள் காப்புறுதி யென்பது தனிநபரின் இறப்பு தொடர்பாக ஏற்படக்கூடிய இழப்புச் சார்பாக மேற்கொள்ளும் காப்பீடு ஒன்றாகும். | (………) |
| 3) சாதாரண பங்குகளுக்கு நிலையான பங்கு லாபம் காணப்படுவதில்லை. | (………) |
| 4) அரச திணைக்களமானது சட்டரீதியான விடயங்களில் தனிமனித அந்தஸ்து உடையதாக விருக்கும். | (………) |

- **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

21) வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர் பாதுகாப்பு முக்கியமாக அமையக்கூடிய இரு வழிகளை எழுதுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

22) பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் நான்கு எழுதுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

23) அ) சிறிய வணிகங்களுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்படும் இரு சேவைகளை எழுதுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

ஆ) அலகுப் பொறுப்பாட்சி நிறுவன அமைப்பில் அலகுரிமையாளர்கள் ………………………… மற்றும் ……………………………… ஆகிய பிரிவினர்கள் சம்பந்தப்படுவர்.

24) அ) வியாபார நோக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இரண்டு அரச திணைக்களங்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

ஆ) சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் இரு குறிக்கோள்களை எழுதுக.

1) ……………………………………………………………………………………………

2) ……………………………………………………………………………………………

25) சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாக அமையும் சுங்கத் தீர்வை தவிர்ந்த நான்கு காரணிகளை எழுதுக.

1) …………………………………………………………………………………………………

2) …………………………………………………………………………………………………

3) …………………………………………………………………………………………………

4) …………………………………………………………………………………………………

## பகுதி –II

**அறிவுறுத்தல்கள்:-**
**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### பகுதி – அ

01) I) வேலைச் சிறப்புத் தேர்ச்சியின் மூலம் உற்பத்தியாளருக்கும், ஊழியருக்கும் ஏற்படத்தக்க இரண்டு பிரதி கூலங்களைத் தனித்தனியாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

II) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி என்றால் என்ன என்பதனை உதாரணத்துடன் விளக்குக. *(02 புள்ளிகள்)*

III) கைத்தொழில் பொருட்களை வரையறுக்க. இதன் பிரதான வகைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

IV) வணிகங்களைப் பல வழிகளில் வகைப்படுத்த முடியும். வணிகங்களை வகைப்படுத்தலின் நான்கு அடிப்படைகளை விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

V) சந்தை இடமும் சந்தை இடைவெளியும் (Market place and Market space) ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க. *(02 புள்ளிகள்)*

மொத்தம் *10* புள்ளிகள்

02) I) வணிகங்களுக்கு பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கலாம் அவற்றில் நான்கு நோக்கங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

II) வழங்குனர்கள் வணிகமொன்றுக்கு வாய்ப்பாக அமைக்கூடிய நான்கு வழிகளை எழுதுக. *(02 புள்ளிகள்)*

III) ஒரு வணிக நிறுவனம் சமுதாயத்தின் பால் கொள்ளவேண்டிய சமூகப் பொறுப்புக்களை விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

IV) நுகர்வோர் விவகார அதிகாரச் சபைச்சட்டத்திற்கமைய வணிகர் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாடுகளை விளக்குக. *(02 புள்ளிகள்)*

V) வணிக விழுமியங்களை பின்பற்றுவது நிறுவன மொன்றிற்கு ஏன் முக்கியமானதென விளக்குக. *(02 புள்ளிகள்)*

(மொத்தம் *10* புள்ளிகள்)

03) I) அ) அரசாங்கத்தின் இரண்டு பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்யக் கூடிய வழிமுறைகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

II) ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் இலங்கை தர நிறுவகத்தால் நியமங்களை அமுல்படுத்தும் இரண்டு முறைகளைக் குறிப்பிட்டு விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

III) தனியுடைமை வணிகங்கள் பொதுவாக உறுதியற்றனவாகும் அவ்வாறான ஒரு சூழ் நிலைக்கான காரணங்கள் யாவை? *(02 புள்ளிகள்)*

IV) அ) பங்குடைமையொன்றில் முக்கியமான சிறப்பியல்புகள் யாவை.

ஆ) பங்குடைமைகள் உருவாக்கப்படக்கூடிய வழிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

V) கூட்டுறவுச் சங்கம் ஒன்றைப் பதிவுசெய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நான்கு ஆவணங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(மொத்தம் *10* புள்ளிகள்)

## பகுதி – ஆ

04) I) அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகமுறையின் நான்கு பிரதி கூலங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

II) "ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முயற்சியாண்மை பங்களிப்பு செய்கிறது"

அ) முயற்சியாண்மை ஊடாக முயற்சியாளருக்கு கிடைக்கும் தனிப்பட்ட இரு அனுகூலங்களை எழுதுக.

ஆ) முயற்சியாண்மை ஊடாக கிடைக்கப் பெறும் சமூகப்பொருளாதார நன்மைகள் யாவை?

(02 புள்ளிகள்)

III) சமூக முயற்சியாண்மை என்பதனால் கருதப்படுவது யாது? உதாரணம் இரண்டு தருக.

(02 புள்ளிகள்)

IV) வணிகர்களின் மத்தியில் கடன்களும் மேலதிகப்பற்றும் பிரசித்தமான நிதிமூலமாகும் இவ்மூலங்களுக்கிடையிலான நான்கு வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக. (02 புள்ளிகள்)

V) இலத்திரனியல் பணம் தொடர்பான சேவைகளில் காணப்படும் வரையறைகள் நான்கு குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

05) I) இடர்களினால் ஏற்படும் சேதங்களில் கூட்டாக பங்கு கொள்ளல் காப்புறுதியின் பணியாகும்.

அ) காப்புறுதி என்பது "இடர்களை ஒன்றிணைத்தல்" என்பதால் கருதப்படுவது யாது?

ஆ) வணிகங்களின் தொடர்ச்சியான செயற்பாட்டில் காப்புறுதி எவ்வாறு துணையாக அமையும் என்பதை விபரிக்குக. (02 புள்ளிகள்)

II) மோட்டார் வாகனக் காப்புறுதியின் கீழ் பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு காப்புறுதிப் பத்திர வகைகளைக் குறிப்பிட்டு, அது தொடர்பில் எவ்வாறு நட்ட ஈடு செலுத்தப்படுமெனக் கூறுக. (02 புள்ளிகள்)

III) வணிகர்களினால் காப்புறுதி செய்யப்படும் இடர்களைக் குறிப்பிட்டு அதற்காக அவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய காப்புறுதிப் பத்திரம் ஒன்று வீதம் குறிப்பிடுக. (02 புன்ளிகள்)

IV) "வணிகச் செயற்பாடுகளுக்கு போக்குவரத்து முக்கியமானது" நான்கு காரணங்களைத் தருவதன் மூலம் இக்கருத்தை விளக்குக. (02 புள்ளிகள்)

V) இலங்கையில் தெருப்போக்குவரத்து பிரபல்யம் அடைந்து காணப்படுவதற்கான நான்கு பிரதான காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

06) I) வணிகக்கருமங்களிற்கு தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கு நான்கு காரணங்களை எழுதுக. *(02 புள்ளிகள்)*

II) அ) கூட்டம் வினைத்திறன் வாய்ந்ததொடர் பாடலாக கருதப்படுவதற்குரிய இரண்டு காரணங்களை எடுத்துக் காட்டுக.

ஆ) எழுத்திலுள்ள ஒரு அவசர செய்தியைப் பரிமாறுவதற்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் இரண்டின் பெயர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

III) உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கு இடைநடுவர்களை பயன்படுத்துவதன் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் எழுதுக. *(02 புள்ளிகள்)*

IV) இறக்குமதி செய்ய விரும்பும் வணிகர் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கான படிமுறைகளை விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

V) அ) சர்வதேச வியாபாரம் உருவாகுவதற்கான காரணங்கள் இரண்டை விபரிக்குக.

ஆ) நாணயக் கடிதத்தின் தொழிற்பாட்டினைச் சுருக்கமாக விளக்குக. *(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

The National e-learning Portal for The General Education